

https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

28th JULY 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 90



# தீர்மானம் நாளை..!!!



ஜனாதிபதி தேர்தலில் மொட்டு கட்சி தனி வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதா அல்லது ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதா என்று மொட்டு கட்சி நாளை திங்கள் கிழமை தீர்மானமெடுக்கவுள்ளது.

இது தொடர்பில் அக்கட்சிக்குள் இரண்டு நிலைப்பாடுகள் உள்ளன.தனி வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட வேண்டும் என்றொரு நிலைப்பாடும் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற இன்னொரு நிலைப்பாடும் உள்ளன.

02 ▶

# நான் தயார்

மொட்டு கட்சியின் சார்பில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு தான் எந்நேரமும் தயாராக இருப்பதாக தம்மிக்க பெரேரா கூறியுள்ளார்.

தான் மஹிந்த சிந்தனையால் ஈர்க்கப்பட்டவன் என்றும் தனது பொருளாதார செயற்பாடுகள் அனைத்தும் மஹிந்த சிந்தனையை அடிப்படையாகக் கொண்டது என்றும் தெரிவித்துள்ள தம்மிக்க மொட்டு கட்சியைத் தவிர வேறு எந்த கட்சியிலும் போட்டியிடுவதற்குத் தயாரில்லை என்று கூறியுள்ளார்.

# சு.கவின் ஆதரவு யாருக்கு? முடிவு இந்த வாரம்

ஜனாதிபதி தேர்தலில் தமது ஆதரவை யாருக்கு வழங்குவது என்ற தீர்மானம் இந்த வாரம் எடுக்கப்படவுள்ளது என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொது செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை,சு.கவின் சார்பில் அமைச்சர் விஜயதாச ராஜபக்சவே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார் என்றும் அவருக்கே தமது வழங்கப்படும் என்றும் சு.கவின் முன்னாள் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



# சஜித்தின் கூட்டமைப்பு: 15ஆம் திகதி விசேட கூட்டம்



ஜனாதிபதி தேர்தலையொட்டி ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் உருவாக்கப்படவுள்ள கூட்டமைப்பு தொடர்பில் விசேட கூட்டமொன்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசாவின் தலைமையில் 15ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

30 இற்கு மேற்பட்ட கட்சிகள் இந்தக் கூட்டணியில் இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள அக்கட்சியின் பொது செயலாளர் ரஞ்ஜித் மதுமபண்டார மேலும் பல கட்சிகள் தம்மோடு இணையும் என்று கூறினார்.



புதுச்சுடர்
www.puthusudar.lk
2024 JULY 28 - SUNDAY

# மன்னிப்பு கோரல் மட்டும் போதுமா?

இஸ்லாத்தில் இறந்தவரின் உடல் அடக்கம் என்பது மிகவும் உணர்வுபூர்வமான–மார்க்கரீதியான ஒன்று.தகனம் என்ற கதைக்கே இடமில்லை.

24 மணி நேரத்துக்குள் அடக்க வேண்டும்.மிகவும் எளிமையான முறையில் அந்த நல்லடக்கம் இருக்க வேண்டும் என்றெல்லாம் பல விதிமுறைகள் உள்ளன. நல்லடக்கத்துக்கு முஸ்லிம்கள் கொடுக்கும் மரியாதையே தனி.

அப்படியானதொரு நிலையில்,அந்த உடலை எரிப்பதென்றால் அதை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாது.அது உயிரிழந்தவரை மீண்டும் கொல்வதற்குச் சமம்.

இந்த உணர்வுகளையெல்லாம் காலின் கீழ் போட்டு மிதித்து கொரோனாவால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை எரிப்பதற்கு உத்தரவிட்டார் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.

புதைப்பதன் மூலம் நீரின் ஊடாக கொரோனா வைரஸ் பரவும் என்ற குருட்டுத்தனமான–அறிவியலுக்கு எதிரான வாதத்தை முன்வைத்தே இந்த அநியாயத்தைச் செய்தார் கோத்தா.

வைரஸ் நிபுணர்கள்,உலக சுகாதார நிறுவனம் உள்ளிட்ட அனைவரும் கோரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களை புதைக்க முடியும்.அவ்வாறு புதைப்பதன்மூலம் நீரின் ஊடாக வைரஸ் பரவாது என்று அவர்கள் கூறியும்கூட அதையெல்லாம் கேட்கவில்லை கோத்தா.

உண்மை தெரிந்திருந்தும்கூட,முஸ்லிம்களை பழிவாங்குவதற்காக அவரது நிலைப்பாட்டில் உறுதியாக நின்றார்.

இறுதியாக,2022 பெப்ரவரியில் அப்போதைய பாகிஸ்தான் ஜனாதிபதி இம்ரான் கானின் தலையீடு காரணமாகவே கோத்தா அவரது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டார்.நல்லடக்கத்துக்கு அனுமதி வழங்கினார்.அதனைத் தொடர்ந்தே ஓட்டமாவடியில் அமைந்துள்ள நஜ்மா நகர் கொரோனா உடல்களை நல்லடக்கம் செய்வதற்கு என்று ஒதுக்கப்பட்டு அதன்பின் கொரோனாவால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்கள் அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டன.

இந்த சம்பவம் நடந்து முடிந்து மூன்று வருடங்களின் பின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையிலான அரசு இந்தக் கட்டாயத் தகனத்துக்கு இப்போது மன்னிப்பு கேட்டுள்ளது.கோத்தா அரசால் முன்னெடுக்கப்பட்ட அந்த கட்டாயத் தகனம் ஒரு இனவாத செயற்பாடு என்பதையும் பேரினவாதிகளை சந்தோசப்படுத்துவதற்காக செய்யப்பட அநியாயம் என்பதையும் இந்த மன்னிப்புக் கோரல் சுட்டிக்காட்டுகிறது.

மன்னிப்புக்கோரல் வரவேற்கத்தக்கதுதான். ஆனால்,அது கேட்கப்பட்ட சூழ்நிலைதான் சந்தேகத்தைக் கிளப்புகிறது.ஜனாதிபதி தேர்தல் காலத்தில் இந்த மன்னிப்பு கோரல் முன்வைக்கப்பட்டிருப்பதுதான் இந்த சந்தேகத்துக்கு காரணம்.

ஜனாதிபதி தேர்தலில் முஸ்லிம்களின் வாக்குகளை பெறுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த வேலையை பார்த்துள்ளாரோ என்று எல்லோரும் சந்தேகிக்கிறார்கள்.

ஜனாதிபதி பதவியை ஏற்று சில மாதங்களில் இந்த மன்னிப்புக் கோரலை விடுத்திருந்தால் இந்த சந்தேகம் வந்திருக்காது.முஸ்லிம்கள் அனைவரும் சந்தோசப்பட்டிருப்பார்கள்.இருந்தாலும்,இது நிராகரிக்கப்படக்கூடிய ஒன்றல்ல.கோத்தா முஸ்லிம்களுக்கு செய்த அநியாயத்தின் வரலாற்றுப் பதிவாக இருப்பதற்கு –அதற்கு சான்றாக இருப்பதற்கு இந்த மன்னிப்புக்கோரல் அமையும் என்பது அதிகமான முஸ்லிம்களின் கருத்து.

இந்த மன்னிப்பு கோரல் மட்டும் போதுமா? குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை இல்லையா என்ற கேள்வியும் முஸ்லிம்கள் தரப்பில் முன்வைக்கப்படுகிறது.

இந்தக் கட்டாய தகனம் மாத்திரமல்ல.இன்னும் எத்தனையோ அநியாயங்கள் மஹிந்தவினதும் கோத்தாவினதும் ஆட்சியில் முஸ்லிம்களுக்கு எதிராக செய்யப்பட்டுள்ளன.அத்தனைக்கும் இன்னும் நீதி கிடைக்கவில்லை. கிடைக்கபோவதுமில்லை.எல்லாவற்றையும் கடந்து செல்ல வேண்டியதுதான்.

## தீர்மானம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பசில் ராஜபக்ச உள்ளிட்ட சில சிரேஷ்ட உறுப்பினர்களும் அரசுடன் இணைந்திருக்கும் மொட்டு உறுப்பினர்களும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர்.

அதேவேளை.மொட்டின் பின் வரிசை உறுப்பினர்கள் தனி வேட்பாளர் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். அதாவது,நாமல் ராஜபக்சவை நிறுத்த வேண்டும் என்று கூறி வருகின்றனர்.

இதற்கு ஏற்ப நாமல்கூட தொடர்ச்சியாக ரணில் விக்கிரமசிங்கவை விமர்சித்து வருவதை அவதானிக்க முடிகிறது. ரணில் மொட்டு கட்சியைப் பிரிந்துவிட்டார் என்ற குற்றச்சாட்டை அவர் முன்வைத்து வருகிறார்.

இந்த இரண்டு நிலைப்பாடுகளில் எதைத் தெரிவு செய்வது என்பது மஹிந்த ராஜபக்சவின் கைகளிலேயே தங்கியுள்ளது.

இது தொடர்பில் நாளை மஹிந்தவின் தலைமையில் கூடும் மொட்டு கட்சி இறுதி முடிவை எடுக்கவுள்ளது.






# வெல்வது யார்?

ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கிடைத்து தேர்தலுக்கான திகதியும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி,செப்டம்பர் 21ஆம் திகதி தேர்தல் இடம்பெறவுள்ளது.எப்படி இருப்பினும்,தேர்தல் நடத்துவதென்பது .உறுதியாகிவிட்டது.

ஏனைய தேர்தல்களை விடவும் இந்தத் தேர்தல் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது.மக்களால் அதிகம் எதிர்பார்க்கப்பட்டது.

அதற்கு காரணம் பொருளாதார நிலைமைதான். மிகுந்த எதிர்பார்ப்புடன் 2019இல் கோத்தாபாய ராஜபக்சவை ஜனாதிபதியாக் கினார்கள் மக்கள்.எல்லாமே வெகு சீக்கிரத்திலேயே பிழைத்துப் போயின.நாட்டு மக்களை முற்றாக ஏமாற்றிவிட்டு அனைவரையும் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளினார்.

தாம் அவசரப்பட்டு - இனவாத பிரசாரத்துக்குள் சிக்கி திறமையற்ற ஒருவரை ஜனாதிபதியாக்கிவிட்டோம் என்று எண்ணி மக்கள் வருந்தினர்.இதனால் பொங்கி எழுந்து அவரை விரட்டியடித்தனர்.

இரண்டு வருடங்களில் அவரது ஆட்சி முடிவுக்கு வந்தது.அவரது மிகுதி காலத்துக்கு ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தால் மொட்டு கட்சியின் ஆதரவுடன் ஜனாதிபதியாக்கப்பட்டார்.

அப்போது இருந்த பெரிய பிரச்சினையான எரிபொருள் மற்றும் மின்சார பிரச்சினையைத் தீர்த்து வைத்தார் ரணில்.இதனால் நிலைமை ஓரளவு சீரானது. சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியைப் பெற்று மிகுதிப் பிரச்சினைகளை ஓரளவு சரி செய்தார்.

இந்த நிதியைப் பெறுவதற்காக நாணய நிதியத்தால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில்,பல வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதனால் பொருட்களின் விலைகள் தாறுமாறாக ஏறி மின் கட்டணமும் அதிகரிக்கப்பட்டது.மின் கட்டண அதிகரிப்பால் கட்டணத்தை செலுத்த முடியாமல் மக்கள் திண்டாடினர்.இப்போதும் திண்டாடுகிறார்கள். லட்சக்கணக்கான இணைப்புகள் துண்டிக்கப்பட்டன.

மறுபுறம்,ஊதிய வரி அறிமுகத்தால் வைத்தியர்கள் உள்ளிட்ட தொழில் நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கினர்.

ரணில் பல பிரச்சினை களை சரி செய்ததை ஏற்றுக் கொண்ட மக்கள் மேற்படி வரி அதிகரிப்பால் உண்டான பிரச்சினைகளால் ரணிலை விமர்சிக்கவும் செய்தனர்.

இருந்தும், ஒரே நேரத்தில் எல்லா பிரச்சினை களையும் சரி செய்யும் வல்லமை அரசிடம் இல்லை என்று கூறும் அரசு தேர்தல் முடிந்த பிறகு கட்டம் கட்டமாக எல்லா பிரச்சினைகளையும் சரி செய்வோம் என்று சொல்கிறது.

அரசின் இந்த உறுதி மொழியை ஏற்று மக்கள் இந்தத் தேர்தலில் ரணிலை ஜனாதிபதியாக்குவதும் தோற்கடிப்பதும் அரசின் தேர்தல் நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது.


மறுபுறம்,எதிர்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தியும் ஜேவிபியும் ரணிலை தோற்கடித்து எப்படியாவது ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற முனைப்பில் களமிறங்கியுள்ளது.இது எந்தவொரு வேட்பாளரும் 51 வீதத்தைப் பெற முடியாத நிலையைத் தோற்றுவிக்கும் என்று அரசியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

இப்படியானதொரு நிலையில்தான் இப்போது ஜனாதிபதி தேர்தல் வந்திருக்கிறது.இந்தத் தேர்தலில் இனவாதம் எடுபடாது. நாட்டைக் கட்டியெழுப்பும்-மக்களின் வாழ்வை முன்னேற்றும் சரியான பொருளாதார கொள்கையே எடுபடும்.

அரசோ எதிர்கட்சிகளோ ,யாராக இருந்தாலும் நாட்டைக் கட்டியெழுப்பும்-மக்களின் வாழ்வை மேம்படுத்தும் சரியான பொருளாதார கொள்கையை முன்வைத்தால் மாத்திரமே வெற்றியைப் பெறலாம்.

உண்மையில், இதை அடிப்படையாக வைத்தே யாருக்கு வாக்களிப்பது என்று மக்கள் முடிவெடுக்க வேண்டும். அதுவே சரியான முடிவாக அமையும்.





கேள்வி : தேர்தல் நடக்குமா ?

கேள்வி : நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்காக நடவடிக்கை எடுப்பதாக கூறப்படுகிறதே?

கேள்வி : உங்களது ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பிரிந்து சென்ற ஐக்கிய மக்கள் சக்தியை உங்களுடன் இணைப்பதற்கு திட்டம் ஏதும் உண்டா?

கேள்வி : ரணில் விக்ரமசிங்க,வஜிர அபயவர்தன மற்றும் நீங்கள் தொடர்பில் கோப்புக்கள் இருப்பதாக அனுர திசாநாயக்க கூறியுள்ளாரே?

கேள்வி : ஜனாதிபதி இப்போது செய்துகொண்டு போகின்ற வேலைகளை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்று நீங்கள் எப்படி நம்புகிறீர்கள்?

# ரணிலின் வெற்றி நிச்சயம்

– இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய செயலாளர் ரவி கருணாநாயக.அவரது முழுமையான பேட்டி கீழே.

**கேள்வி : தேர்தல் நடக்குமா?**

பதில் : யாராலும் ஏற்க முடியாத சவாலை ஏற்று செய்து காட்டியவர் எமது தலைவர் ரணில் விக்ரமசிங்க.அப்படிப்பட்டவர் தேர்தலில் போட்டியிடுவாரா, தேர்தலை நடத்துவாரா என்று சிலர் கேட்கிறார்கள்.

அவர் நிச்சயம் போட்டியிடுவார். பொது வேட்பாளராக போட்டியிடுவார் தேர்தலை நடத்துவார்.அவரால் மாத்திரம்தான் இந்த நாட்டை முன்னேற்ற முடியும் என்று நிரூபித்துக் காட்டியுள்ளார்.

தேர்தலில் போட்டியிட்டு வென்று மிகுதி பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார்.இந்தப் பொருளாதார பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இவர்தான் சரியானவர் என்று இப்போது எல்லோரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். கடந்த தேர்தலில் ரணிலுக்கு வாக்களிக்காதவர்கள் இந்தத் தேர்தலில் அவரை ஆதரிப்பதற்காக சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

**கேள்வி : நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்காக நடவடிக்கை எடுப்பதாக கூறப்படுகிறதே ?**

பதில் : அப்படி எதுவும் இல்லை.இப்படியான சந்தர்ப்பத்தில் அதைச் செய்வதற்கான தேவை இல்லை.எல்லா கதைகளையும் விட்டுவிட்டு ஜனாதிபதி தேர்தலுக்குத் தயாராகுங்கள் என்றே அனைவரிடம் கேட்கிறோம்.

**கேள்வி : உங்களது ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பிரிந்து சென்ற ஐக்கிய மக்கள் சக்தியை உங்களுடன் இணைப்பதற்கு திட்டம் ஏதும் உண்டா?**

பதில் : ஆம் உண்டு.நாம் எல்லோருக்கும் அழைப்பு விடுத்துள்ளோம்.இன்னும் சில நாட்களில் நடக்கப்போவதை உங்களால் காண முடியும்.

**கேள்வி : ரணில் விக்ரமசிங்க,வஜிர அபயவர்தன மற்றும் நீங்கள் தொடர்பில் கோப்புக்கள் இருப்பதாக அனுர திசாநாயக்க கூறியுள்ளாரே?**

பதில் அப்படி வைத்திருந்தால் ஏன் இன்னும் அதை வைத்திருக்க வேண்டும்? நீதிமன்றுக்கு சென்று நடவடிக்கை எடுக்கலாமே. வெளிப்படையாக அதில் உள்ளவற்றைக் கூறலாமே.ஏன் மறைத்து வைத்திருக்க வேண்டும்?

**கேள்வி : ஜனாதிபதி இப்போது செய்துகொண்டு போகின்ற வேலைகளை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்று நீங்கள் எப்படி நம்புகிறீர்கள் ?**

பதில் :நாடு இதற்கு முன் இருந்த நிலைக்கும் இப்போது இருக்கின்ற நிலைக்கும் இடையில் இருக்கின்ற வித்தியாசத்தை மக்கள் உணர்ந்துள்ளார்கள்.

> குடும்ப அரசியலைக் கொண்டு வருவதற்கு நான் விரும்பவில்லை. மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக இளைஞர்கள் அரசியலுக்கு வர வேண்டும். அந்த வாய்ப்பை எனது குடும்பத்துக்கு வெளியே உள்ள ஏனைய இளைஞர்களுக்கு கொடுக்க விரும்புகிறேன்.

மின் துண்டிப்பு இல்லை. எரிபொருள் வரிசை இல்லை. பொருட்களுக்கான தட்டுப்பாடு இல்லை.டொலருக்கான தட்டுப்பாடு இல்லை.ரணிலுக்கு ஏசியவர்கள் எல்லாம் இப்போது அவரை பாராட்டத் தொடங்கியுள்ளனர்.

**கேள்வி : அப்படியென்றால் ஏன் இந்த ஆர்ப்பாட்டங்களும் வேலை நிறுத்தங்களும் இடம்பெறுகின்றன?**

பதில் : நியாயமான கோரிக்கைகளுக்கு பதில் வழங்கப்பட்டுள்ளது.இப்போது முன்வைக்கப்பட்டிருப்பது அநியாயமான கோரிக்கைகள். மக்கள் இதற்குள் சிக்கி சீரழிகின்றனர். அவர்களின் அன்றாட ஊதியத்தை இழக்கின்றனர்.

**கேள்வி : இந்த வேலை நிறுத்தப் பிரச்சினையை தீர்க்காமல் இதைக் காரணமாகக் காட்டி அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதற்கு- வெளிநாடுகளுக்கு விற்பதற்கு அரசு முற்படுகிறது என்று குற்றஞ்சாட்டப்படுகிறதே?**

பதில் : இது ரணிலுக்கு எதிராக அன்றிலிருந்து முன்வைக்கப்பட்டு வரும் போலிக் குற்றச்சாட்டு.ரணில் ஜனாதிபதியாக பதவியேற்று இதுவரைக்கும் ஒரு நிறுவனமானது தனியார்மயப்படுத்தப்பட்டுள்ளதா? ஒரு நிறுவனமானது வெளிநாடுகளுக்கு விற்கப்பட்டுள்ளதா? இல்லாவே இல்லை.

**கேள்வி : உங்களது பிள்ளைகள் அரசியலுக்கு வருவார்களா ?**

பதில் : ஒருபோதும் இல்லை. அரசியல் என்பது வெளியில் இருந்து பார்ப்பதற்கு இலகுவான பயணம்போல் தெரியலாம்.ஆனால், இது உண்மையில்,மிகவும் கடினமான பயணம்.

அதுமட்டுமல்ல, குடும்ப அரசியலைக் கொண்டு வருவதற்கு நான் விரும்பவில்லை. மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக இளைஞர்கள் அரசியலுக்கு வர வேண்டும்.அந்த வாய்ப்பை எனது குடும்பத்துக்கு வெளியே உள்ள ஏனைய இளைஞர்களுக்கு கொடுக்க விரும்புகிறேன்.

**கேள்வி : ரணில் விக்ரமசிங்க தான் தேர்தலில் போட்டியிடுவார் என்று எப்போது அறிவிப்பார்?**

பதில் : வேட்பாளர் நியமனம் தாக்கல் செய்யும்போது – என்றார்.



## நமது பிள்ளை, பிள்ளையின் சகபாடிகளின்

# உறவு கட்டமைக்க வேண்டியதா? கட்டுப்படுத்த வேண்டியதா?

ஒன்றாக பள்ளி சென்று வீடு திரும்பி, மாலையில் ஒன்று கூடி விளையாடி மகிழ்ந்திருந்த சகபாடி சூழல் நம் தலைமுறையோடு முடிவு கண்டு விட்டது. கல்வியின் அடிப்படை தனிமனித நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் அந்நடத்தை ஒரு சமூக வெளிப்பாடாகவே அமைய வேண்டும்.

ஆனால் இன்றைய நம் கல்வி முறைமை எந்த அளவிற்கு சமூகமய தலைமுறையொன்றை உருவாக்குகிறது என்ற வினா இக்கட்டுரைக்கான அடிப்படை எனக் கொள்வோம். பெற்றோர், குடும்பம், ஆசிரியர், பாடசாலை என்ற கட்டமைப்பை கடந்து பிள்ளைகளை சமூக மயப்படுத்துவதில் சம வயது சகபாடிகளின் பங்கு பெருந்திரளானது என்பதே உண்மை.

சிறந்த சித்திகளைப் பெற்று உயர் பட்டம் பெற்றவர் சக மனிதர்கள், சக இனத்தவர், கலாச்சாரத்தவரை மதிக்க தவறி சுயநல நோக்கோடு செயல்படுவாரெனில் அவர் பெற்ற கல்வியின் பூரண தன்மை கேள்விக்கிடமாகின்றது.

சிறந்த சமூக நடத்தை, ஆற்றல், பற்று உள்ள ஒருவர் கல்வி கட்டமைப்பில் சரிவர சித்தி பெற தவருகிறான் எனில் அங்கு அவருக்கு வழங்கப்பட்ட கல்வியே கேள்விக்கிடமாகின்றது. இந்த சமூகமயமாக்கல் மற்றும் கல்வி சமநிலையின்மையே நம் நாட்டு அனேகமான பிரச்சனைகளுக்கு அடிப்படையாக உள்ளது.

குண்டு சட்டியில் குதிரை ஓட்டும் கல்வி முறையில் ஆளுமை, திறமை, பற்றி என்பவற்றை கொண்ட சமூகத்தை காட்டிலும் பந்தய குதிரைகளே பழக்கப்படுத்தப்படுகின்றனர்.

துரதிஷ்டம் எங்கு பந்தயத்தில் தோற்றுப் போகும் குதிரைகளை விட இடையில் வழிதடுமாறி இடை நின்ற குதிரைகளே அதிகம் என்பது தான்.

“தனிநபர்கள் தான் சார்ந்த சமூகத்தின் கலாச்சாரத்தை கற்றறிந்து கொள்கின்ற செயல்முறையே சமூகமயமாக்கல். சமூகமயமாக்களுக்கு உட்படுத்தப்படாத எவரும் அவர் வாழுகின்ற சமூகம் விதித்த நியமனங்களுக்கு ஏற்ப இயல்பான மனிதராக கருதப்பட மாட்டார். “ என்ற ர்யசய டயஅடிழளஇ ர்ழடடிழசெ (1990) புகழ்மிக்க அறிஞர்களின் கருத்தை நான் இங்கு முன்மொழிகின்றேன்.

நாம் பெற்று வளர்க்கும் நம் பிள்ளைகளை சமூகமயமாக்கம் செய்வதில் குறிப்பிட்ட வயதிற்கு மேல் நம்மை காட்டிலும் சம வயது சக பாடிகளினது பங்கு அதிகமானது.

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னிருந்த சகபாடி சூழலும் தற்போதுள்ள சகபாடி சூழலும் முற்றிலும் வேறுபட்டது. இது தொடர்பாக போதுமான விளக்கம் இன்மையினாலேயே இன்றைய பெற்றோர்கள் பிள்ளைகளின் சம வயது சகபாடி உறவிற்கு முட்டுக்கட்டையாக செயல்படுகின்றனர்.

இங்கே நம் பாடசாலை பிள்ளைகளை நான் ஒரு தொகுதிகளில் வைத்து பார்க்க விரும்புகிறேன். ஒன்று சுதந்திர செயல்பாடுடைய பெற்றோரின் மிதமிஞ்சிய கட்டுப்பாட்டிற்கு உட்படாத பிள்ளைகள். மற்றொன்று பெற்றோரின் கடும் கண்காணிப்பில் மிதமிஞ்சிய அரவணைப்பில் வளரும் பிள்ளைகள். இதில் இரண்டாம் வகைப்பிள்ளைகள் கற்றல் செயல்பாடுகளில் சிறப்பாக செயல்பட்டாலும் சமூகம் சார் புரிதல் இன்றி பிற்காலத்தில் சமூகத்திற்கு முகம் கொடுப்பதில் சிரமப்படுவதை காண முடிகிறது.

நம் பிள்ளைகள் சம வயது சகபாடிகளை சந்திக்கும் பிரதான இடம் பாடசாலை ஆகும். ஆனால் அங்கு பொதுவான உடை, நடத்தை, ஒழுக்கம் என ஒரு கட்டுப்பாடு பேணப்பட்டாலும் கூட தற்கால நடைமுறையில் பிள்ளைகள் பிரத்தியேக வகுப்புகள், தான் சார்ந்த சமூகம், ஊடகங்கள் என பரந்த அளவில் சகபாடிகளின் உறவை கட்டமைத்து கொள்கின்றனர்.

குறிப்பிட்ட வயதுக்கு மேல் பிள்ளைகள் பெற்றோர், சகோதரர், ஆசிரியர்களை காட்டிலும் சம வயது சக பாடிகளிலேயே அதிக நம்பிக்கை கொள்கின்றனர்.

காரணம் தாம் சார்ந்த ஒத்த சிந்தனை, ஒத்த செயல்பாடு, எதிர்பார்ப்பு, விருப்பு வெறுப்பு, ஆர்வங்கள், நடத்தை என்பன சம வயது சதபாடிகளிடமே சரளமாக கிடைத்தலாகும்.

அதீத சுதந்திர உணர்வு, கட்டுப்பாடுகளுக்கு கட்டுப்படாமை, புதுமை நாட்டம் போன்ற மனநிலைகள் கட்டளைமைப் பருவ மாணவர்களின் பொதுவான இயல்பாகும்.

இதற்கு சம வயது சதபாடிகளின் கூட்டுணர்வு பக்கபலம் சேர்க்கின்றன.

நம் பெற்றோர்களும் ஆசிரியர்களும் இந்நிலையினை கையாள்வதில் நடைமுறை சிக்கல்களை சந்திக்கின்றனர். அதீத கட்டுப்பாடுகளை விதித்து யாருடனும் பழகவிடாமல் கற்றல் செயல்பாடுகளுக்கு மட்டும் பிள்ளைகளை மட்டுப்படுத்தியும், அதேவேளை கண்காணிப்பற்ற சுதந்திரத்தை வழங்கி தவறான வழிகளில் பிள்ளைகள் செல்வதையும் அவதானிக்காத அலட்சியமான போக்கினையும் நம் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் கொண்டிருப்பதால் பொதுக் கண்ணோட்டத்தில் பார்க்கையில் நம் மாணவ சமுதாயத்திற்கு சம வயது சசபாடிகளின் உறவு என்பது எதிர்மறையானதாக தென்படலாம்.

ஆனால் இது சற்று நுணுக்கமாக ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும். தனித்திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், சாதனைகளை படைக்கவும், சமூக உணர்வு, ஒற்றுமை, தேசப்பற்று, சக சமூகங்களை இனங்காணல், சமூக பேதங்களைக் கடந்து நட்பு, உறவு, நம்பிக்கை போன்ற நிலைகளை அடைவதற்கு சம வயது சகபாடிகளின் உறவு ஒவ்வொரு பிள்ளைக்கும் அத்தியாவசியமானது. யாருடனும் பழகாது தனித்துவிடப்பட்ட ஒரு மாணவன் கற்றல் நடவடிக்கைகளில் சிறப்பாக செயல்படுவான் ஆயினும் மாணவனின் உளவியல் நிலை குறித்து ஆராயுமிடத்து சிறந்த சமூகமயமாக்கப்பட்ட மாணவனாக அம்மாணவன் இல்லை என்பது புலப்படும்.

நடைமுறையில் வளர்ந்து விட்ட ஊடக கலாச்சாரம், சமூக வலைதள பாவனை, பிரத்தியேக வகுப்பு கலாச்சாரம் என்பன நகர்புற மாணவ சமூகங்களை அதிகமாக பாதித்துள்ளன.

அண்மைக்காலமாக நாம் கேள்விப்படும் சில சம்பவங்களை சிந்தித்து பார்ப்போம். மாணவரை கண்டித்த ஆசிரியரை மாணவர் தாக்கியமை, பள்ளி இறுதி நாளில் பாடசாலை பொருட்களை சேதப்படுத்தியமை, அவ்வப்போது சமூக வலைத்தளங்களில் உலா வரும் பாடசாலை மாணவர்களின் சீர்கேடான காணொளிகள், தொலைபேசி மறுக்கப்பட்டமைக்கு கொண்டமைக்கு தற்கொலை செய்து கொள்ளுதல், காதல் தோல்வி மன அழுத்தம் போன்ற வயதுக்கு ஒவ்வாத காரணங்களுக்காக தற்கொலை செய்து கொள்ளுதல், சமூகவிரோத செயல்பாடுகளில் ஈடுபடுதல், போதை பொருளுக்கு அடிமையாகுதல் மற்றும் போதை பொருள் பாவனை, வாழ்க்கை சூழலுக்கு பொருத்தமற்ற உடல் அலங்காரங்களை செய்து கொள்ளுதல், எதிர்காலம், எதிர்கால தொழில் இலட்சியம் போன்ற குறிக்கோள்கள் அற்று நடைமுறை சார்ந்த விருப்பங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுதல் போன்ற பல்வேறு விடயங்களை வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம். இதற்கும் சம வயது சகபாடிகளின் பங்கு அல்லது போக்கு மிக மிக அடிப்படையாக அமைகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

சமூக விரோத செயல்பாடுகள், போதைப்பொருள் பாவனை போன்றன மாணவர்களிடையே கடத்தப்படுவதில் சம வயது குழுக்களின் பங்கு அதிகம்.

இதற்கு சமூக விரோதிகளின் செயல்பாடுகள் அடிப்படையாய் அமைந்தாலும் மாணவர் சமூகத்தில் பரவுவதில் சமவயது குழுக்களின் பங்கு அதிகமானது. இதற்கு சமவயது மாணவர்கள் இவ்வாறான பிழையான விடயங்கள் மீது கொண்டுள்ள பிரிய மனப்பாங்கு காரணம் எனலாம்.

அண்மையில் பிரபல சகோதரமொழி எழுத்தாளர் நம் பிள்ளைகளின் ஒழுக்கத்தை தெரிந்து கொள்ள வேண்டுமெனில் பாடசாலை விட்டபிறகு பஸ்தரிப்பிடங்களுக்கு வந்து பாருங்கள் என தெரிவித்து இருந்தார்.

பாடசாலைகளை குறி வைத்துள்ள போதை வஸ்து, சமூக விரோத குற்ற செயல்களை தடுக்கவும் மாணவர்களை சமூக பற்றுள்ள ஒழுக்க விழுமிய நோக்குடைய பொறுப்புள்ள பிரஜைகளாக மாற்ற வேண்டும்.

எனில் சில உபாயங்களை நம் பெற்றோர்களும் பாடசாலை கட்டமைப்பும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

சமவயது சகபாடிகளின் உறவு நிலைகளை தடுப்பதால் தீர்வு இல்லை. சிறந்த நண்பர் வட்டாரத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ள பிள்ளைகளை வழிப்படுத்த வேண்டுமே அன்றி நண்பர்களை நாமே தேர்ந்தெடுத்து கொடுக்கக் கூடாது. நண்பர்களுக்கிடையில் உள்ள நட்பு நிலையில் வெளிப்படை தன்மையை பேணும் வகையில் பிள்ளைகளிடையே நம்பிக்கையே வளர்த்துக் கொள்ள வேண்டும்.

கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் ஆசிரியர்களும் பாடசாலையும் சகபாடி கற்றல் உத்திகளை கையாள வேண்டும்.

நடைமுறை சார்ந்த பிரச்சினைகளை கருத்தில் கொண்டு கலைத்திட்டம் மற்றும் கற்றல் செயற்பாடுகளில் மாணவர்களுக்கு எதிர்காலம் குறித்த சிறந்த நோக்கு, ஒழுக்க விழுமியுங்கள், குறிப்பாக பாலியல் கல்வி, பொழுதுபோக்கு மற்றும் அழகியல் சார்ந்த கல்வி, தேசிய பற்று மற்றும் ஒற்றுமை போன்ற கருத்தமைவுகளை கொண்ட கல்வி முறைகளை செயல்படுத்த வேண்டும்.

அன்றி முன்பு குறிப்பிட்டது போல் பரீட்சையினை நோக்கமாகக் கொண்டு ஓட்டம் போடும் மாணவ சமூகத்தை பின்னின்று துரத்தும் கல்வி முறையாக தொடர்ந்து நீடிக்குமாயின் கல்வி – சமூகமயமாக்கல் என்ற இரு கருத்தாடல்கள் இடையிலான ஒரு பெரும் இடைவெளி நம் மாணவ சமூகத்தில் வெளிப்படும்.

மாணவப் பருவம் என்பது வாழ்வில் வண்ணமிகு பருவமாகும். இதில் முக்கிய வர்ணங்கள் நட்பு நிலையிலேயே தங்கியுள்ளன. அதனை வாழ்விற்கு சாதகமாக மாற்றும் திறமை அனைத்து பிள்ளைகளிடமும் உண்டு என்பதை எனது நம்பிக்கை.

அதற்கு தகுந்த வழிகாட்டல்களை நம் பெற்றோர்களும் பாடசாலைகளும் வழங்கினாலே போதுமானது. இல்லையேல் கற்ற சமூகம் சமூக பொறுப்பின்றி சுயநலப் போக்கினையும், சமூகமயமாக்கம் பெற்ற சமூகம் கல்வியில் சிறக்க வழி இன்றி தவிப்பதனையும் என்ற இரு நிலைப்பட்ட பேதம் நம் சமூகத்தை தொடர்ந்தும் தேக்க நிலையிலே வைத்திருக்கும்.

**சுபாகரன் சதீஸ்**
4ம் வருட கல்வியியல் சிறப்புக் கற்கை மாணவன்
கல்வி, பிள்ளை நலத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

# பல்மருத்துவ சங்கத்துடன் கைகோர்த்த சிக்னல்



இலங்கை பல் மருத்துவ சங்கத்தின் (ளுடுனுயு) வெற்றிகரமான 91ஆவது வருடாந்த விஞ்ஞான அமர்வுக்கு, முன்னணி வாய்ச் சுகாதார பராமரிப்பு வர்த்தக நாமமான சிக்னல், பிரதான அனுசரணை வழங்கியுள்ளது.

இது கடந்த 2024 ஜுன் 28ஆம் திகதி ”புதுமை, புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பம்” எனும் கருப்பொருளின் கீழ் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அறிவுப் பகிர்வு, தொடர்பை ஏற்படுத்தும் வலையமைப்பு, இத்துறையிலான முன்னேற்றங்களை ஆராய்தல் ஆகிய அம்சங்களை முன்னிலைப்படுத்தி மூன்று நாட்கள் இடம்பெற்ற இந்த நிகழ்வு, இலங்கை முழுவதிலும் உள்ள முன்னணி பல் மருத்துவ நிபுணர்களை ஒன்றிணைத்திருந்தது.

சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரண, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன உள்ளிட்ட முக்கிய அதிதிகளின் பங்கேற்புடன் இதன் ஆரம்ப வைபவம் இடம்பெற்றது.





# ஒளியூட்டிய சுதேசி கொஹொம்ப

மூலிகை பராமரிப்பு உற்பத்தியில் முன்னோடியும் சந்தையின் முன்னணி நிறுவனமுமா கந்தானை சுதேசி தொழிற்சாலை, சுதேசி கொஹொம்ப ஆலோக பூஜா திட்டத்தின் கீழ், இலங்கையின் இரண்டு முக்கிய வழிபாட்டுத் தலங்களான கதிர்காமம் கிரி வெஹெர மற்றும் ருஹுனு மகா கதிர்காம தேவாலயங்களை ஒளிரச் செய்தது.

எசல திருவிழாவை முன்னிட்டு நடத்தப்படும் இந்த நிகழ்வு 23ஆவது வருடமாக இம்முறையும் கடந்த 2024 ஜுலை 06ஆம் திகதி முதல் ஜுலை 20, 2024 ஆம் திகதி வரை இடம்பெற்றது.

இலங்கைக்கு சொந்தமான தொழிற்சாலை எனும் வகையில், இவ்வாறான வருடாந்த 'ஆலோக பூஜா' போன்ற செயற்பாடுகளுக்கு ஆதரவளித்து இலங்கையின் கலாசாரம் மற்றும் பாரம்பரிய விழுமியங்களை பாதுகாப்பதை கடமையாக கருதுவதாக, சுதேசி தொழிற்சாலையின் தலைவி அமரி விஜயவர்தன தெரிவித்தார்.

அனைத்து வழிபாட்டாளர்களின் நலனுக்காக மாத்திரமன்றி நாட்டின் பாரம்பரியத்தை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி இளைய தலைமுறையினருக்கு விழிப்புணர்வூட்டுவதனையும் இது அடிப்படையாகக் கொண்டு, சுதேசி தொழிற்சாலையினால் நாட்டில் உள்ள வழிபாட்டுத் தலங்கள் ஒளியூட்டப்பட்டு வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகின்றதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# Uber Green அறிமுகம்




Uber தனது உலகளாவிய பிரதான நிலைபேற்றியல் தயாரிப்பான Uber Green என்பதை கொழும்பில் அறிமுகப்படுத்துவது குறித்து இன்று அறிவித்துள்ளது.

இது சவாரி செல்கின்றவர்கள் தனது Uber செயலியில் ஒரு சில படிமுறைகள் மூலமாக சூழல்நேயம் மிக்க சவாரிகளை முற்பதிவு செய்துகொள்ள இடமளிக்கும்.

இலங்கையில் 2040 ஆம் ஆண்டளவில் பூஜ்ஜிய உமிழ்வுடனான போக்குவரத்து மாற்றத்திற்கான தனது பயணத்தை விரைவுபடுத்தும் நோக்குடன், இந்நாட்டில் Uber Green மூலமாக, கேட்டுப் பெற்றுக்கொள்ளும் மின்சாரத்தால் இயங்கும் வாகன சவாரிகளை விரிவுபடுத்துவதற்கு ருடிநச திட்டமிட்டுள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு செல்வதற்கான, அங்கிருந்து வருவதற்கான சவாரிகள் அடங்கலாக, சவாரி செல்கின்றவர்கள் நாடெங்கிலும் பசுமை சவாரிகளை தற்போது கேட்டுப் பெற்றுக்கொள்வதற்கு Uber Green ஐ தெரிவு செய்துகொள்ள முடியும்.

# Tata Xenon Yodha வாகனம் அறிமுகம்

உலகின் முன்னணி வாகன உற்பத்தியாளர்களில் ஒன்றான வுயவய ஆழவழசள, தனது அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தரான னுஐஆழு நிறுவனத்துடன் இணைந்து, பல்துறை பயன்பாடு கொண்ட, நம்பகமானீஉைட-ரி வாகனங்களுக்கான சந்தையில் அதிகரித்து வரும் தேவையை நிவர்த்தி செய்யும் வகையில், புதிய வுயவய ஓநழெ லுழனாய வினை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஒரு வலுவான மற்றும் ஸ்டைலான செயற்பாட்டுத் திறன் மிக்க வுயவய ஓநழெ லுழனாய வாகனமானது, சொகுசையும் பாதுகாப்பையும் உறுதியளிக்கும் அதே நேரத்தில், தினசரி நடவடிக்கைகளுக்கான சிரமமின்றிய பொருட்கள் போக்குவரத்தையும் உறுதி செய்கிறது.

இந்த வாகனத்தின் அறிமுகம் தொடர்பில் வுயவய ஆழவழசள வணிக வாகனப் பிரிவின் சர்வதேச வணிகத் தலைவரான அநுரக் மெஹ்ரோத்ரா (யுரெசயப ஆநாசழவசய) கருத்துத் தெரிவிக்கையில், ”ஒரு முன்னணி வர்த்தக வாகனங்களுக்கான வர்த்தகநாமம் எனும் வகையில், வாடிக்கையாளர்களின் தெரிவுகளுக்கமைய அவற்றை மேம்படுத்துவது தொடர்பில் நாம் ஆழமான புரிதலைக் கொண்டுள்ளோம்.

அத்துடன் மேம்படுத்தப்பட்ட பயணம் மற்றும் சரக்குப் போக்குவரத்துக்கான வாகன அறிமுகங்கள் மூலம் அவற்றை நிவர்த்தி செய்வதில் நாம் உறுதியாக இருக்கிறோம். புதிய வுயவய ஓநழெ லுழனாய ஆனது, வாகனத்தின் உரிமையாளராவதற்கான செலவு மற்றும் அதிக இலாபத்துடன், சிறந்த வாகன செயற்றிறனை தேடும் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனம் தரம், நீடித்த ஆயுள் மற்றும் செயற்றிறன் ஆகியவற்றில் புதிய வரையறைகளை அமைக்குமென, நாம் நம்புகிறோம். னுஐஆழு உடனான எமது ஆறு தசாப்த கால கூட்டாண்மை மற்றும் விரிவான நாடு தழுவிய சேவை வலையமைப்பு, சிறந்த விற்பனை மற்றும் சேவை வழங்கல் போன்றவற்றில் தரத்தை பேணுவதற்கு இது உறுதியளிக்கிறது.” என்றார்.






# மின்சார வாகனம் அறிமுகம்

Sensei Capital Partners, Atman Group மற்றும் Sino Lanka Private Limited ஆகியவற்றுக்கு இடையேயான முன்னோடி கூட்டு முயற்சியான நுளழடரவழைெ யுரவழ, இலங்கையில் நிலையான போக்குவரத்தில் புரட்சியை ஏற்படுத்தத் தயாராகும் அதன் புதிய மின்சார வாகன (EV) வரிசையை அறிமுகப்படுத்துவதில் பெருமிதம் கொள்கிறது.

மேம்பட்ட மின்சார செயற்பாட்டு தீர்வுகளை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன், Evolution Auto இலங்கையர்களின் பயண வழியை மாற்றியமைத்து, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துகிறது.

புதிய EV வரிசையில் பின்வருவன அடங்கும்:

Mahindra Treo::

இது மூன்று சக்கர பயணிகள் மற்றும் சரக்கு வாகனமாகும்.இதன் நம்பகத்தன்மை மற்றும் செயல்திறனுக்காக இந்தியாவில் அதிகம் விற்பனையாகும் மூன்று சக்கர மின்சார வாகனமாக இது உள்ளது.

Ather Electric Scooters::

இவை அதிநவீன தொழில்நுட்பத்தை சிறந்த செயல்திறனுடன் இணைக்கும் இந்தியாவின் பழமையான மற்றும் மிகவும் ஸ்தாபிக்கப்பட்ட மின்சார ஸ்கூட்டர்களாகும்.

Revolt Electric Bikes:

சக்தி மற்றும் நிலைத்தன்மையின் தடையற்ற கலவையை வழங்கும் இந்தியாவின் மிகவும் பிரபலமான மின்சார சைக்கிள்களாக இவை உள்ளன.

சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் பொருளாதார ரீதியில் இலாபகரமான உயர்மட்ட மின்சார வாகனங்களை இலங்கை அணுகுவதை இந்த கூட்டாண்மை உறுதி செய்கிறது.

# வாடிக்கையாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட நெகிழ்ச்சித் தன்மை




இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், வாடிக்கையாளர்களுக்கு தமது ஆயுள் காப்புறுதித் திட்டங்களை நிர்வகித்துக் கொள்வதற்கான வசதியை மேம்படுத்தும் வகையில் பரந்தளவு கொடுப்பனவு தெரிவுகளை அறிமுகம் செய்துள்ளது.

அதில் நிறுவனத்தின் கட்டமைப்புகள், பங்காளர் வங்கிகள் மற்றும் மூன்றாம் தரப்புகள் போன்றன அடங்கியுள்ளன.

வாடிக்கையாளர்களுக்கு கட்டுப்பண கொடுப்பனவுகளை மொபைல் app ஆன Clicklife - unionassurance.com/click-life-app ஊடாக மேற்கொள்ள முடியும். அதனூடாக ஸ்மார்ட் சாதனங்களை பயன்படுத்தி, தமது ஆயுள் காப்புறுதித் திட்டங்களை இலகுவாக நிர்வகித்துக் கொள்ள முடியும்.

தொழிற்துறையில் முதன் முதலில் அறிமுகம் செய்யப்பட்ட புரட்சிகரமான, வாடிக்கையாளர்கள் ஆயுள் காப்புறுதித் திட்டங்களை நிர்வகிக்கும் வசதியாக Clicklife App அமைந்துள்ளது. மேலும், கட்டுப்பணக் கொடுப்பனவுகளை, யூனியன் அஷ்யூரன்ஸ் தலைமையகத்தில், நிறுவனத்தின் கிளைகளில் அல்லது வாடிக்கையாளர் போர்டல் பகுதியான portal.unionassurance.com மற்றும் pay.unionassurance.com எனும் கட்டுப்பண செலுத்தும் லிங்கினூடாக மேற்கொள்ள முடியும்.

# Lean Six Sigma மஞ்சள் மற்றும் பச்சை பட்டிகளின் அங்கீகாரத்தை கொண்டாடும் செலான்



செலான் வங்கி ஒன்பது Lean Six Sigma மஞ்சள் பட்டிகள் மற்றும் ஏழு Lean Six Sigma பச்சை பட்டிகள் ஆகியவற்றின் அங்கீகாரத்தை பெருமையுடன் அறிவித்தது.இது செயற்பாட்டு சிறப்பு மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கான அதன் அர்ப்பணிப்பில் குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும்.

அண்மையில் நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதிப் பொது முகாமையாளர் - செயற்பாடுகள் மலிக் விக்கிரமநாயக்க் அஸ்ட்ரிட் இட்டமல்கொட, உதவி பொது முகாமையாளர் - செயற்பாடுகள் சஞ்சய வல்பிட, பயிற்சி மற்றும் மேம்பாட்டு மையத்தின் சிரேஷ்ட முகாமையாளர் மற்றும் ரன்மோர் வன்டோர்ட், சிரேஷ்ட முகாமையாளர் வணிக செயன்முறை மறு-பொறியியல் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்

2019ஆம் ஆண்டில் மஞ்சள் பட்டி மட்டத்தில் Lean Six Sigma பயிற்சி ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து, செலான் வங்கி பல்வேறு தளங்களில் அதன் முக்கிய செயற்பாட்டு மேம்பாடுகளை இலக்காகக் கொண்ட திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

இந்த முன்முயற்சிகள், சேவை விநியோக காலக்கெடுவை சீர்செய்தல், நுகர்வுப் பயன்பாட்டை மேம்படுத்துதல், பிழைக் குறைப்பு மூலம் சேவைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் நிலையான வணிக வளர்ச்சியை ஊக்குவிக்க பணியாளர்களின் செயல்திறனை அதிகரித்தல் ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

# சந்தைப்படுத்தல் துறை வல்லுனர்கள் கௌரவிப்பு

பீப்பள்ஸ் லீசிங் அன்ட் ஃபினான்ஸ் பிஎல்சி, தனது அங்குரார்ப்பண "ஊநுமு ஊடரடி" நிகழ்வை, 2023 ஜ/ன் 13 அன்று கொழும்பிலுள்ள புகழ்பூத்த தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடாத்தியுள்ளது.

முதல்முறையாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஊநுமு ஊடரடி என்ற பிரத்தியேகமான நிகழ்ச்சித்திட்டமானது, நிறுவனத்தில் உச்ச பெறுபேறுகளை நிலைநாட்டுகின்றவர்களுக்கு அங்கீகாரமளித்து, போற்றிக் கொண்டாடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்நிகழ்விற்கு முன்பதாக பல்வேறுபட்ட ஆர்வமூட்டுகின்ற மற்றும் போட்டி நிகழ்வுகள் இடம்பெற்றிருந்ததுடன், பல்வேறுபட்ட கிளைகள் மத்தியில் விற்பனைப் பெறுபேறுகளை முன்னெடுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட கிளைகளுக்கு இடையிலான போட்டியொன்றும் இவற்றுள் அடங்கியிருந்தது.

இப்போட்டியின் வெற்றியாளர்களுக்கு ஊநுமு ஊடரடி நிகழ்வில் விருதுகள் வழங்கப்பட்டதுடன், வெளிநாட்டுச் சுற்றுலாக்கள், ஹோட்டலில் தங்குவதற்கான திட்டங்கள் மற்றும் பேர்ள் பே இல் ஒரு நாள் பொழுதைக் களிப்பதற்கான ஏற்பாடு அடங்கலாக வியப்பூட்டும் பரிசுகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

நாடளாவியரீதியிலுள்ள பீப்பள்ஸ் லீசிங் அன்ட் ஃபினான்ஸ் பிஎல்சி கிளை வலையமைப்பிலிருந்து 200 க்கும் மேற்பட்ட உச்ச சந்தைப்படுத்தல் வல்லுனர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றதுடன், நிறுவனத்தினுள் காணப்படும் பரவலான ஈடுபாடு மற்றும் உற்சாகமான போட்டி மனப்பாங்கு ஆகியவற்றை சுட்டிக்காட்டுவதாக இது அமைந்துள்ளது.

